**IN THE COURT OF THE LABOUR COURT, SALEM**

# CP. 55 /2021

**Deposition of RW1**

Name : **நாகமணி** Husband / Father's Name :

Village : Taluk :

Caste : Religion :

Age : Calling :

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Thiru. M. Raju, Bench Clerk Grade-I of this court on 03.03.2023 in accordance with Provisions X of Evidence Act 1872.

**குறுக்கு விசாரணை**

மனுதாரர் அவரது கோரிக்கை மனுவில் 7 தலைப்பின் கீழ் நிலுவை தொகை கோரியுள்ளார் என்றால் சரி. மனுதாரர் 6 தலைப்பின் கீழ் நிலுவை தொகை கோரியிருப்பதாக கூறியிருககிறேன் என்றால் சரி. மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்திருந்த ID 538/1998 வழக்கில் 17.11.2001 ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த வழக்கின் தீர்ப்பில் பணி நீக்கம் ெ◌ரத்து செய்யப்பட்டு மீண்டும் பணி தொடர்ச்சியுடன் மீண்டும் வேலை வழங்க மற்றும் உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரி. அந்த தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரருககு 16.10.2002 பணி பணித்தொடர்ச்சியுடன் மீண்டும் வேலை வழங்கப்பட்டது என்றால் சரி . மேற்படி தீர்ப்பை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் எங்கள் நிர்வாகம் ரிட் தாக்கல் செய்ததது என்றால் சரி. அந்த ரிட் மனுவை 02.12.2011 ல் அம்மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்வத்தை உறுதி செய்ததது என்றால் சரி. 27.09.2002 ஆம் தேதி நிர்வாகம் மீண்டும் பணி வழங்கிய போது ஓட்டுநருக்கான குறைந்தபட்ச ஊதிய விகிதத்தில் ஆரம்ப நிலையில்

தான் சம்பளம் வழங்கப்பட்டது என்றால் சரி. உதவி மேலாளர் பணியாளர் எ.ம.சா.ஆ 3 கடிதத்தை உதவி மேலாளர் ( MACT ) க்கு அனுப்பியுள்ளார் என்றால் சரி. எ.ம.சா.ஆ 4 ல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள கணக்கீட்டு பட்டியலில் சம்பள கணக்கீட்டுள்ள விவரங்கள் படிக்ககூடிய நிலையில் இல்லை என்றால் சரி. எ.ம.சா.ஆ 6 மற்றும் 7 கடிதங்கள் ஒரு உதவி மேலாளர் மற்றொரு உதவி மேலாளருக்கு அனுப்பிய கடிதம் என்றால் சரி. எ.ம.சா.ஆ 3 ,6 மற்றும் 7 கடிதத் தொடர்புகள் குறித்து தாக்கல் செய்துள்ள பதிலுரையில் கூறப்படவில்லை என்றால் சரி. எ.ம.சா.ஆ 3 , 4 , 6 மற்றும் 7 ல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள கணக்கீடு குறித்து மனுதாருக்கு அறிவிப்பு கொடுத்து அவரின் கருத்து கேட்கப்பட்டதா என்றால் இல்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு 2011 முதல் அவர் பணி ஓய்வு பெறும் வயது வரை ஊதியத்தை தீர்ப்பு படி மறு நிர்ணயம் செய்து மனுதாரருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் உத்தரவு கொடுக்கப்பட்டது. அது எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா என்றால் 24.02.2012 ஆம் தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 24.02.2012 ல் மனுதாரருக்கு சம்பளம் மறு நிர்ணயம் செய்யப்பட்டு உத்தரவு அனுப்பபட்ட விவரம் பதிலுரையில் கூறப்பட்டதா என்றால் இல்லை. மனுதாரரின் பணிப்பதிவேட்டில் சம்பளம் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள பதிவுகள் பின் யோசனையின் அடிப்படையில் தவறாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் பணிநீக்கம் செய்யப்பட்ட தேதி முதல் மீண்டும் பணி வழங்கப்பட்ட தேதி வரை உள்ள காலத்தை பணி முறிவு காலமாக கருதப்பட வேண்டும் என்று தொழிலாளர் நீதிமன்ற தீர்வத்திலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பிலும் சொல்லப்படவில்லை என்றால் சரி. மனுதாரர் கேட்டுள்ள போனஸ் நிலுவை தொகை ஒவ்வொரு வருடமும் எவ்வளவு சதவீதம் போனஸ் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அரசு உத்தரவிட்டுள்ளது என்பதை பதிலுரையிலும் எனது முதல் விசாரணைக்கான சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் சரி. மனுதாரருக்கு எப்போது பணி ஓய்வு வழங்கப்பட்டது என்றால் 28.12.2019 ஆம் தேதி பணி ஓய்வு வழங்கப்பட்டது. பணி ஓய்வு தேதி வரை மனுதாரருக்கு பணித்தொடர்ச்சிக்குரிய ஊதியம் மற்றும் இதர பலன்களை கணக்கிட்டு கொடுக்கப்படவில்லை என்றால் தவறு. 2012 ஆம்

வருடத்திலேயே கொடுக்கப்பட்டது. 2012 லிலேயே கொடுக்கப்பட்டுவிட்டது என்பதை காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மனுதாரர் மனுவில் கோரியுள்ள ஒவ்வொரு தொகைக்கும் நிர்வாகம் சரியாக பதில் சொல்லவில்லை என்பதினால் மனுதாரர் கோரியுள்ள தொகையை நிர்வாகம் கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல .

**மறுவிசாரணை – இல்லை**

**Sd/-S.Sumathy,**
**Presiding Officer,**
**Labour Court, Salem.**